




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.11.2025) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில், முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மங்காப் புகழொளியைத் தமதாக்கிக் கொண்ட
# மாமன்னர் இராசராச சோழன் புகழ் போற்றுவோம்!
### 1040ஆவது சதய விழாவையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!





சென்னை, நவ.3-

மாமன்னர் இராசராச சோழனின் 1040ஆவது சதய விழாவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**தமிழர்களின் கலைத்திறன், போர்த்திறன், கப்பற்கலை, பாசன முறை என அனைத்தின் உச்சமாக ஆட்சிசெய்து மங்காப் புகழொளியைத் தமதாக்கிக் கொண்ட மாமன்னர் இராசராச சோழனின் 1040 ஆவது சதய விழா இன்று.**

**தஞ்சை மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு, நேற்றுமுதல் பல்வேறு நிகழ்ச்சிகளு டன், தஞ்சை மாநகர் முழுவதும் வண்ண விளக்குகள் ஒளிர, சதய விழா கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.**

**தமிழர்களின் பெருமையாக அவர் நமக்காக விட்டுச் சென்றுள்ள பங்களிப்புகளை நினைவுகூர்ந்து, பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லி, மாமன்னர் இராசராச சோழன் புகழ் போற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் – கனகதாரா ஆகியோரின் இளைய மகனுக்கு கருணாநிதி என்று பெயர் சூட்டி வாழ்த்தினார்.





